# கிழக்கு முரசு

மாதாந்த பத்திரிகை

மலர் 1 | 1949-ம் ஆு மார்கழி-மீ | இதழ் 1


## நிர்வாகம்

ஒரு நாட்டின் நன்மைக்காக அந்நாட்டு அரசாங்கம் கையாளும் சாத்தியமான, பயன்தரும் முறைகள், திட்டங்களிலிருந்தே அவ்வரசாங்கத்தின் திறமை கணிக்கப்படுகிறது. பாராளுமன்றத்தில் நாட்டு வளர்ச்சிக்கெனப் பல திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. பெருந் தொகைப் பணமும் ஒதுக்கப்படுகிறது. இப்பணத்தைப் பயன்படுத்தித் திட்டங்களைச் சரிவர நிறைவேற்ருது விட்டால் எவ்வித பயனுமில்லை. பாராளுமன்றப் பேச்சுக்கள் உருப்படவேண்டும். நாட்டின் நலனுக்குப் பயன்படுத்தக் கருதும் பணம் எவ்வழிகளிற் செலவாகிறதென்பது எல்லாருக்கும் தெரியவேண்டும். பணத்தைச் செலவிடுபவர்கள் பரந்த நோக்கமும், தேசிய உணர்ச்சியும் உடையராயிருத்தல் அவசியம். முகத்தாட்சணியம், பாரபட்சம், தப்பெண்ணங்கள் இருத்தலாகா. அவசியமற்றவாக்குவாதங்கள், துவேஷ உணர்ச்சி, காரணமின்றித் தாமதஞ் செய்தல் என்பன தவிர்க்கப்படவேண்டும்.

உத்தியோகஸ்தர் தம்மிடம் வரும் ஜனங்களை உரிய மரியாதையுடன் நடத்தவேண்டும். கருமம் பெறக் கந்தோருக்கு வந்த கிராமவாசியை இவர்கள் வெடுவெடுப்பாக நடத்தியதாக அடிக்கடி அறிகிறோம். பல மைல் நடந்து களைத்து வந்திருக்கும் கிராமவாசி "வெளியே போ" "வெளியில் நில்" என்பனபோன்ற சொற்களைக் கேட்க நேரிடுகிறது. அதனால் மனமுடைகிறான். விரைவிற் கருமத்தை முடித்துத் திரும்புவோம் என்றெண்ணிவந்தவன் அடையும் ஆறுதல் இதுதான். உடனே அரசாங்க ஊழியர் கல் மனம் படைத்தவர், சுயநலப் புலிகள், பொதுஜன சேவையல்ல, சுயநல ஊழியம் பார்க்கவே இருக்கிறார்கள் என்றெண்ணுகின்றனர்

அரசாங்க கந்தோருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பப்படுகிறது கடிதம் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. விண்ணப்பக்காரனின் தேவை பூர்த்தியானபாடில்லை. பல மாதங்களின்பின் பதில் வருகிறது. பயன் யாது? இவ்வித நிர்வாகம் உடனே நிறுத்தப்படவேண்டும்.

அரசாங்கம் தேச வளர்ச்சிக்காகச் செய்யும் செலவுகளை எல்லோரும் கவனிக்க வேண்டும். செலவுக்கேற்ற பெறுமதியைப் பெறவேண்டும். பெருந் தொகைப் பணம் பாழாக்கப்படுகிறது என்பது பொதுவானவோர் குறச்சாட்டு. திட்டங்கள் செம்மையாக நிறைவேற பொதுஜன ஒத்துழைப்பு அவசியம். அங்காங்கு ஒதுக்கப்படும் பணத்தைச் செலவிடும் அதிகாரிகளின் நல்லெண்ணமும் வேண்டும்.

கடந்த மகாயுத்தம் ஒரு கடுமையான நிலைமையை நிலைநாட்டிச் சென்றுள்ளது. நமது தேசிய உணர்ச்சி இன்னும் உரிய அளவுக்கு வரவில்லை. இலகுவாக, விரைவாக, சோம்பேறி முறைகளால், கௌரவமற்ற வழிகளில் பணம் சேகரிக்கப்படுதலை நாம் உற்று நோக்கவில்லை. உணரவில்லை. கைலஞ்சம் கொடுத்தல் நெறிகேடான செயலென்பதையும் ஆழமாக நோக்குவதில்லை. இவை நம் நாட்டு வளர்ச்சிக்குப் பெருந்தடைகள். தேசிய வளர்ச்சியே தலையான கருமமாகக் கருதப்பட வேண்டும், பொது மக்கள் இக்கைலஞ்சம் கொடுக்கும் பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும். லஞ்சத்தால் நடத்தப்பட்டதை, நடைபெறுவதை அதிகாரிகள் பரிசீலனை செய்து உடனே ஏற்ற நடபடிக்கையெடுக்கவேண்டும். எவ்வித சிறிய குறைபாடாயிருந்தாலும் கூடியவரையில் கவனித்து நிவர்த்தியளிக்க வேண்டும்.

## வாழ்த்துகிறோம்

யுத்தத்தினுல் நம் நாடும் பெரிதும் பாதிக்கப்பட்டது. மக்கள் பல கஷ்டங்களுக்குள்ளாயினர். இப்படியான தருணத்தில் ஸ்ரீமான் J. W. H. ஒறீகன் அவர்கள் உதவிமாகாண அதிபராக இங்கு வந்தமை நம் மூரவரின் பெரும் அதிஷ்டமே. அவர் கடமையேற்றபோது அநேக பொறுப்புகள், சிக்கலான நிலைமைக்கு அவரை எதிர் நோக்கியிருந்தன. 1947-ல் ஏற்பட்ட பெருவெள்ளத்தின்போது இவர் செய்த சேவைகள் ஏற்கனவே இவருக்குப் பெரும்புகழைக் கொடுத்துள்ளன. இப்புகழுக்கு ஈனமேற்படாதவாறு இவர் உடனே தேச சேவையிலீடுபட்டார். சீரழிந்து, நிலைகுலைந்து கிடந்த அநேக பிரச்சினைகளை மிகச் சீக்கிரத்தில் சீர்ப்படுத்தினுர். ஆனுல் காத்திராப்பிரகாரம் இவர் சேவையிலிருந்து இளைப்பாறவிருக்கிறார் என்ற செய்தி வந்தது. எல்லார்க்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. மக்களின் மனதை வாட்டியது.

பகிரங்க மேடைகளில் பேசும் எவரும் பிறநாட்டார் ஆட்சியையிட்டுச் சிறிதாவது குறிப்பிடாமற் போவதில்லை. இப்படியான வேளையில் ஸ்ரீமான் ஒறீகன் அவர்கள் நேர்மை, உண்மை பாரபட்சமற்ற நிர்வாகம் என்ற முக்குணங்களை நம் மக்கள் மனதிற் பதித்துச் செல்கிறார். இவரது அயரா உழைப்பும், அரிய சேவைகளும் திருகோணமலை வாசிகள் மனதை விட்டு என்று நீங்கமாட்டா.

ஸ்ரீமதி ஒறீகன் அவர்களும் சமூக சேவையிற் சளைத்தவரல்ல. நாட்டின் நன்மைக்கெனப் பல சேவைகள் புரிந்துள்ளார். இன்னார் இருவருவ தம் எதிர்கால வாழ்க்கையில் பேரும், புகழும், பெருவாழ்வும் பெறுவார்களென வாழ்த்துகிறோம். எங்கெங்கே சென்றாலும் அங்கங்கு அவர்களின் சேவைகள் செவ்வனே முடிகவென இறைவனை வேண்டுகிறோம்.

## வரவேற்கிறோம்

நமது புதிய மாகாண அதிபர் சாதாரணமானவரல்ல. திரு. N. Q. டயஸ் C C S. அவர்கள் ஏனைய பகுதிகளில் சிறந்த சேவைகள் புரிந்தனர், பயனடைந்தார், பெரும்புகழும் பெற்றவர். அவசரகால மாகாண அதிபராகப் பல பகுதிகளில் கடமையாற்றிப் பரந்த அநுபவம் பெற்றவர். இப்படிப்பட்ட ஒருவர் கிருஷிக நாடாகிய திரிகோணப் பகுதிக்கு மிகவும் தகுதியுடையவரே. கிருஷிகம், நீர்ப்பாசனம், கிராம முன்னேற்றம் சம்பந்தமாகக் கூரிய அறிவும், பாரிய அநுபவமும் படைத்தவர். இவற்றின் பயன் இவர் முன்பிருந்த பகுதிகளில் இன்னும் அநுபவிக்கப்படுகின்றன. இந்நாட்களில் திரிகோணமலைப் பகுதியில் பாரிய விவசாயத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் எத்தனித்துள்ளது. சரியான, வேண்டிய தருணத்தில், பொருத்தமான ஒருவர் நமக்குக் கிடைத்துள்ளனர். ஏனைய பகுதி மக்கட்கு தம் பெரும் முயற்சியால் பயன்பெற்று மகிழச்செய்த இவர் இவ்வூர் வாசிகட்கும் அவ்வித முயற்சிகளால், ஆவன செய்து களிப்பூட்டுவார் என்ற பெருநோக்கத்துடன் இவ்வூர் மக்கள் அவரை வரவேற்கின்றனர்.

## இவ்வூர் தொழில் நிலைமை

திரிகோணமலையில் நிலைபதியாக வசிக்கும் எத்தனையோ பேர் வேலையின்றித் தவிக்கின்றனர். இவர்கள் பல ரகங்களைச் சேர்ந்தவர்கள். அரசாங்க ஸ்தாபனங்களில் இடங்கள் காலியாகின்றன. அவற்றில் இம்மக்களை அமர்த்துவதில் தடங்கலும், தாமதமும் ஏற்படுகின்றன. இது மிக வருந்தத்தக்க, துரதிஷ்டமான நிலைமை. உள்நாட்டு மந்திரியவர்கள் இவ்வூருக்கு விஜயஞ்செய்தபோது இங்குள்ள அரசாங்க சாராயத் தொழிற்சாலையில் ஏற்பட்ட காலியான இடங்கட்கு வெளியூர்வாசிகள் அமர்த்தப்பட்டிருப்பதைக் கவனித்தார். உடனே அப்பகுதித் தலைவரிடம் இனிமேல் இவ்வூர்வாசிகளையே இங்கு ஏற்படும் வேலைகளுக்கு நியமிக்க வேண்டும் என்று கூறினர். தொழில் போக்குவரத்து மந்திரியவர்களின் விஜயத்தின்போது இவ்வூர் பல பகுதிச் சேவர்களும் அவரைப் பேட்டிகண்டனர். அரசாங்கம் தங்கட்கு இருப்பிட வசதி செய்துதர வேண்டுமெனக் கோரினர். மந்திரியவர்கள் இவர்களின் கோரிக்கையைக் கவனிப்பதாகக் கூறினர். மேலும் இவ்வித சேவைகள் அவ்வவ்வூர் வாசிகட்கே உரியன; இவர்கட்கு மாற்றம் கிடையாது. ஆகவே அவர்கள் தத்தம் ஊரிலேயே வேலைகளிற் சேரவேண்டும் என வற்புறுத்தினர்.

இவ்வூர்த் தொழிற் கந்தோர் அதிகாரிகள் மந்திரிமாரின் அபிப்பிராயங்களை மனதில் பதித்து, இவ்வூர்வாசிகளையே இங்கு வேலைக்கமர்த்த முயற்சியெடுப்பார்களென நம்புகிறோம்.

## உள்ளூர் அரிசி உள்ளூரிலேயே விநியோகிக்கப்பட வேண்டும்

திரிகோணமலைப் பகுதியில் ஏராளமாக நெல் விளைவிக்கப்படுகிறது. ஆனுல் இவ்வூர்வாசிகட்கு இந்த நாட்டரிசி வழங்கப்படுவதில்லை. இது நம்மவரின் நெடுநாளைய மனக்குறை. யுத்த காலத்தில், இவ்வரிசி விநியோகம் சம்பந்தமாக உணவுக் கட்டுப்பாட்டதிகாரிகள் கையாண்ட முறை ஒத்துக்கொள்ளக்கூடியதே. ஆனுல் அவ்வித அவசரகாலம் நீங்கிய பின்பும் ஏன் இந்த அநீதியான முறை? அரிசி தட்டுப்பட்டால் இவ்வூருக்குப் பிசின் அரிசிதான் வருகிறது. இதுவோ உணவுக்கு அறவே தகுதியற்றது. ஏன் இந்த அரிசிதான் வரவேண்டும்? இப்பகுதி ஓர் புறக்கணிக்கப்பட்ட பகுதியாகக் கருதப்படுகிறதா? புறக்கணிக்கப்பட்ட பகுதிதானே, அதனுல் எவ்வித கழிவுப் பொருட்களையும் இங்கு அனுப்பலாம் என்பது அரசாங்கத்தின் கொள்கையா? இவ்வித அவகேடான நிலையில் மக்கள் மனக் கொதிப்பும், வெறுப்பும் கொள்ளுவதில் என்ன தவறுண்டு?

மேலும் இங்குள்ள கூட்டுறவு, உணவு விநியோகப் பகுதியாருக்கும், விற்பனைப் பகுதியாருக்கு மிடையில் சரியான ஒற்றுமை, கூட்டுறவு கிடையாது; சம்பந்தமில்லை. இதனுல் இவ்வூரிலேயே குத்தப்பட்ட அரிசிகூட இவ்வூர்வாசிகட்குக் கிடைப்பதில்லை. இது சம்பந்தமாக இப்பகுதிப் பிரதிநிதி, கிருஷிகப் பகுதி மந்திரியவர்களுடன் கடுமையாக வாதாடினுர். பேச்சுவார்த்தை நடத்தினுர். அதன் பயனுக இவ்விவகாரம் ஓரளவு நிவர்த்தியாக்கப்பட்டுளது. இனியேல் இங்கு விளைவித்துக் குத்தப்படும் அரிசி இவ்வூர் மக்கட்கே விநியோகிக்கப்படும் என்றறிகிறோம். இது மகிழ்ச்சிக்குரிய ஓர் செய்தியே.

## கிராமங்களில் பரும்படியான நீர்ப்பாசன வேலைகள்

கிராம முன்னேற்றத் திட்டங்கள் சம்பந்தமான வேலைகள் மிகவும் சீரழிந்து கிடக்கின்றன வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது திரு. N.M. பெரோரா அவர்கள் ஒரு வருஷத்துக்கு ஒரு குளம்தான் அளவை செய்ய முடியுமென ஒரு எஞ்சினீயர் தமக்கு அறிவித்துள்ளதாகக் கூறினுர். இக்கூற்று உடனே கிருஷிகப் பகுதி மந்திரியால் ஆட்சேபிக்கப்பட்டது. நம் அயற்பகுதிகளில் கடந்த அரசிறை

வருடத்தில் அநேக குளங்கள் அளவிடப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டுள்ளன என்பதை நாம் அறிவோம். ஆனால் திரிகோணமலைப் பகுதி படிப்படியாக திரு N M பெரேரா கூறிய நிலைமைக்குத்தான் வருகின்றது. இவ்வூரில் அநேகர் நீர்ப்பாசன வசதியுள்ள நிலங்கட்குப் போவதற்கு மிகவும் ஆவலுடனிருக்கின்றனர்.

தீவிரமாக முதலில் முடிக்க வேண்டிய, ஆரம்ப அளவை நிர்மாண வேலைகளைக் காட்டும் அட்டவணை மிகச் சிறியது. சம்பந்தப்பட்ட பகுதிகள் சரியான முயற்சி யெடுத்தால் இவ் வேலை முழுவதையும் இரண்டு வருடங்களில் முடிக்கலாம். இத்தருணத்தில் மந்திரி காரியாலயம் குறித்த வேலைகளின் வளர்ச்சியைக் காட்டும் மாதாந்த அறிக்கைகளை வரவழைத்துப் பார்வையிடுவது நலமாகும். இவ்வூர் மக்களிற் பெரும்பாலார் கமக்காரர். இவர்களின் நன்மையை முன்னிட்டு அரசாங்கம் கிருஷிக சம்பந்தமான வேலைகளை இவ்வண்ணம் சீரழியவிடாமல் முயற்சியெடுத்து மேலோங்கச் செய்வது அவசியமாகும்.

புல்மோட்டைக் கிராமத்தின் யான்-ஓயாத் திட்டத்தையிட்டு இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகும். கட்டுக் குளம்பற்றில் இதுவே பெரிய கிராமமாகும். இங்குள்ள பெரும் பகுதி நிலம் மழையைக்கொண்டே விளைவிக்கப்படுவது. யான்-ஓயா ஆறு இவ்வயல்களில் ஓரமாக ஓடி வங்காளக்குடாவுள் விழுகின்றது. பழங்காலத்தில் இங்கு ஓர் குளம் இருந்ததாகவும், இதிலிருந்தே பெரும் பகுதி நிலம் நீர்ப்பாய்ச்சப் பெற்றதாகவும் தெரிகிறது. இப்போது இச் சிறு குளம், கட்டுகள் தகர்ந்து, சிதைவுண்டு, பாழடைந்து கிடக்கின்றது. கடந்த 20 வருஷங்களாக இக்கிராமவாசிகள் இந்த யான்ஓயா ஆற்றிலிருந்து நீர்ப்பாசன வசதி பெறப் பாடுபட்டனர். நீர்ப்பாச்சற் பகுதியார் இவ்வேலையிலீடுபடத் தொடங்கி 12 வருஷங்களாகின்றன. ஆனால் தகுந்த காரணம் யாதுமின்றி இவ்வேலை அடிக்கடி தாமதிக்கப்பட்டு வருகின்றது. இன்றுவரை இது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இதுவோர் பராகண்டிதமான அசட்டையாகும். கிருஷிகமந்திரி உடனே இவ்விஷயத்தைக் கவனித்து, அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவரது கடமையாகும்.

## ஈச்சிலம்பத்தைப் பகுதியும், அதன் எதிர்கலமும்

ஈச்சிலம்பத்தைக் கிராமவாசிகள் தங்கள் வயல்களுக்கு வேண்டிய நீரைப் பெறுவதற்கு எப்பொழுதும் கஷ்டப்பட்டனர். இக்கிராமம் ஏனைய கிராமங்களின் தொடர்புகள் இல்லாது தனித்து காடுகளினிடையே இருக்கிறது. உபயோகப்படக்கூடிய தாவரங்களோ மிக அருமை. இவ்விடத்தைக் குடியேற்றம் செய்து முன்னேற்றுவதற்கு பல தொண்டர்கள் மிகக்கடுமையாகப் பாடுபட்டுள்ளனர். பாரிய வயற் செய்கை நடத்தவும் முயன்றுள்ளனர். மகாவலிகங்கையின் ஒரு கிளையான வெருகல்கங்கை இக்கிராமத்துக்கும் வயல்களுக்கும் அருகாமையால் பாய்கின்றது. ஆயினும் இவ்வாற்றிலிருந்து கிராம வயல் நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு எவ்வித வசதிகளுமில்லை. வயல் நிலமும், பயன்படுத்தக்கூடிய நீர் வசதியும் இங்ஙனமிருக்க, இக்கிராமத்தை மாற்றி அல்லைக்குளத் திட்டத்தின் கீழ் குடியேற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தையிட்டு இன்னும் அதிகமாக ஆலோசனை செய்யக் கோருகிறோம். மேலும், இத்தீர்மானத்தை நிறைவேற்ற முன், ஈச்சிலம்பத்தைக் கிராமவாசிகளுடன் இது சம்பந்தமாய் விசாரணை செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நகருக்கு வேண்டிய மரக்கறிகள் இங்கே விளைவிக்கப்படாததேன்?

திரிகோணமலைப் பட்டின முழுவதற்கும் வேண்டிய மரக்கறி விநியோகத்தையிட்டு நெடுங்காலமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. யுத்தத்திற்கு முன், ஒரு காலத்தில் இந்நகருக்கு வேண்டிய மரக்கறி முழுவதையும், அயற் கிராமங்களே- அதினினும்பிரதானமாக சாம்பற்தீவு விளைவித்தன. யுத்தகாலத்தில் மக்கள் இலேசாகப் பணந்தேடும் வழிகளைக் கையாண்டனர். யுத்தப் பகுதிகளில் வேலைக்குச் சேர்ந்தனர். தோட்டச் செய்கை கைவிடப்பட்டது. அப்போது கண்டி முதலிய இடங்களிலிருந்து மரக்கறிகள் இறக்குமதியாயின. விலையும் உயர்ந்தேறியது.

இதன் காரணங்களை மக்கள் உணர்ந்தனர். யுத்தப் பகுதிகளில் வேலைகளைவிட்டுத் தங்கள நிலங்களுக்குத் திரும்புகின்றனர். இவ்வேளை கிருஷிகப பகுதியார் முயற்சியெடுக்க வேண்டும். தோட்டச் செய்கைக்குப் புத்துயிரளிக்க வேண்டும். தேவையான வசதிகளைச் செய்துகொடுத்து மக்களையும், தொழிலையும் உற்சாகப்படுத்தி, நாட்டின் நல்வாழ்க்கைக்கு உதவுவார்களென எதிர்பார்க்கிறோம்.

## திரிகோணமலைக்கு ஓர் பனிக்கட்டி தொழிற்சாலை (ஐஸ் மோள்)

### இன்னும் தாமதிக்கப்படுவதேன்?

திரு. ஜோர்ஜ் ஈ. டி. சில்வா அவர்கள் கைத்தொழில் மீன் பிடி இலாகா மந்திரியாயிருந்தபோது ஒரு கூட்டம் நிகழ்ந்தது. மீன் பிடிக்கும் பகுதிகளின பாராளுமன்றப் பிரதிநிதிகள் அக்கூட்டத்தில் பங்குபற்றினர். மந்திரியவர்களே தலைமை வகித்தார். இக் கூட்டம் ஐஸ் தொழிற்சாலைகளை எங்கெங்கு ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானிப்பதற்காகக் கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் திருகோணமலைப் பிரதிநிதி, தகுந்த காரணங்களை எடுத்துக்காட்டி இவ்வூரிலேயே முதல் முதலில் இவ்வித தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று வாதாடினார். இவரது கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டது. இது நடைபெற்று ஒன்றரை வருஷங்களாகிவிட்டன. ஆனால் இதுவரை எங்காவது ஒரு ஐஸ் தொழிற்சாலை கட்டப்பட்டுள்ளதா அல்லது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தில் ஏதும் மாற்றங்கள் செய்யப்பட்டனவா என்பதைப் பொது மக்கள் அறிய மிகவும் ஆவலுள்ளவராயிருக்கின்றனர். அப்படித் தீர்மானம் மாற்றப்பட்டால் அதற்கான காரணங்கள் யாவோ?

## துறைமுகப் பகுதிக் கிராமங்கள்

### யுத்த காலத்தில் அரசாங்கம் எடுத்த நிலங்கட்கு நன்கொடை.

யுத்த அவசர காலத்தில் அநேக கிராமங்களை அரசாட்சியார் எடுத்துக்கொண்டனர். இவற்றிற் பெரும்பாலானவை துறைமுகப் பகுதியைச் சேர்ந்தவை. நூற்றுக் கணக்கான கிராமவாசிகள் 24 மணித்தியால அவகாசத்தில் கின்னியா ஆற்றுக்கப்பால் அனுப்பப்பட்டனர். அவர்களது நிலங்களும் வீடுகளும் போர் வீரரால் உபயோகிக்கப்பட்டன. இன்று இந் நிலங்களிற் பெரும் பகுதி அழிந்து, கவனிப்பாற்றுக் கிடக்கின்றது. சில பகுதிகளில் போர் வீரரின் நிலையான இருப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த நிலங்களை அரசாட்சியார் எடுத்து 7 வருடங்களாய்விட்டன. யுத்தம் முடிந்து மூன்று வருடங்கள் முடிகின்றன. இவ்வளவு காலமாகியும் அரசாங்கம் கிராமவாசிகட்குக் கொடுக்க வேண்டிய வாடகை, நன்கொடைகளைக் கொடாமல் வைத்திருப்பது மிகவும் வருந்தக்கூடிய நிலைமையாகும். இத்துரதிஷ்டமான நிலையை அரசாங்கம் உணர்ந்து உடனே ஏற்ற நடபடிக்கை யெடுத்துக் கிராமவாசிகட்குச் சேரவேண்டிய பணம், நிலத்தை இன்னும் தாமதம்பண்ணாமல் அளித்துவிடுமென நம்புகிறோம்.

## விறகு விநியோகப் பிரச்னை

திரிகோணமலை மக்கள் தமக்கு வேண்டிய விறகைப் பெறுவது மிகவும் கஷ்டமாயிருந்தது. இந்தக் கஷ்டத்தைத் தீர்த்து வைப்பது மிகவும் சில்லங்கமாயுமிருந்தது. கிடைப்பதருமை. அதுவும் மிக அதிகமான விலையாயிருந்தது. அரியப்பட்ட மரங்களும், வீடு கட்டத் தேவைப்படும் மற்றும் பிற வகை மரங்களும் கிடைப்பதும் அருமையாகவே காணப்பட்டது. இக்கஷ்டங்கட்கு நிவாரணமளிக்கவே காட்டுக் கந்தோர் அதிகாரிகள் ஒரு மரக்காலையை ஸ்தாபித்துள்ளனர். இங்கு விறகும், வீட்டுத் தளபாடங்கட்கு வேண்டிய மரங்களும் கிடைக்கும், ஆயினும் விறகு சம்பந்தமான கஷ்டங்கள் இன்னும் முற்றுய்த் தீர்ந்தபாடில்லை. வியாபாரிகள் விறகுக் காலைகளில் குறைந்த விலைக்கு விறகு வாங்கிப் பொது மக்கட்கு அதிக விலைக்கு விற்றுப் பணம் சம்பாதிக்கின்றனர். இவ்வித நிலைமையும் நிவிர்த்தியாக்கப்பட வேண்டும். நகரத்தின் இரு அந்தங்களிலும் இரு விறகுக் காலைகள் அமைக்கப்பட வேண்டும். இவைகள் காட்டுப் பகுதி அதிகாரிகளாலேயே நடத்தப்படல் நலம். இவற்றிலிருந்து பொது மக்கட்கே விறகு விற்கப்படல் வேண்டும். இவற்றைத் தொடங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் ஏனோ விளங்கவில்லை. சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர் இன்னும் தாமதம் செய்யாமல் கூடிய விரைவில் வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது

## தேங்காய் விலையேற்றம்.

### அதைத் தடுக்க முயற்சியெடுக்கப்படாததேன்?

சில மாதங்களாகத் தேங்காய் விலை ஏறிக்கொண்டே போகிறது. இப்போ தேங்காய் கிடைப்பதே அருமையாகிவிட்டது. பல கிராமங்கள் தங்கள் தேவைக்கும் கண்டு ஏற்றுமதியும் செய்யும் அளவுக்குத் தேங்காய் விளைவித்தன. ஆனால் இன்று தங்கள் தேவைகட்குக்கூடத் தேங்காய் கிடையாமல் அருந்தல்படுகின்றனர். வெளியூர்களிலிருந்துவரும் தேங்காய்களையே எதிர் நோக்கியிருக்கின்றனர். இவர்கள் இப்படிக் கஷ்டப்பட்டால், பட்டினவாசிகள் எவ்வித கஷ்டப்படக்கூடும் என்பதை ஒருவாறு உணரலாம். கிராமத்தில ஜனத்தொகை குறைவு. பட்டினத்தில் அதிகம். இப்போ இவ்வூரில் யுத்தத்தின் முன் இருந்ததிலும் இருமடங்கு ஜனத்தொகை உண்டு. இவர்களின் நிலைமையாது?

இது சம்பந்தமாக உடனே கவனமெடுக்க வேண்டியது கூட்டுறவுப் பகுதியாரின் கடமையாகும். ஒரு கூட்டுறவுத் தேங்காய் விற்பனவுச் சங்கம் ஏற்படுத்துவதற்கான சகல வசதிகளுமுண்டு. இப்படியான ஒரு சங்கத்தின் மூலம் குருநாகல், புத்தளம் முதலிய ஊர்களிலிருந்து தேங்காய்களைத் தருவித்து, நியாயமான விலைக்குப் பொது மக்கட்கு விற்கலாம். இம்முறை மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு ஒரு சிறந்த வழியாகும்.

## அரசாங்க ஊழியர்க்கு ஸ்தல சகாய நிதி (ஸ்டேஷன் அலவன்ஸ)

திரிகோணப் பகுதி அரசாங்க ஊழியர்க்கு இந்த உதவி நிதி கொடுக்கப்பட வேண்டுமா என்ற விஷயம் நீண்ட தாமதத்திற்கும் ஆலோசனைக்கும்பின் கொடுக்கப்படத்தான் வேண்டும் என அங்கீகரிக்கப்பட்டுள்ளமை அறிந்து மகிழ்தற்குரியதே. திரிகோணமலையில் செலவினங்கள் வரவர கேவலமடைகின்றன. இப்படியான நிலைமையில் இந்தச் சகாய நிதியை நிறுத்த எத்தனித்தமை பெரிய ஏமாற்றத்தையே உண்டாக்கியது. அவ்விதம் நிறுத்தப்பட்டால் உள்ளதிலும் அதிகமாகவே கஷ்டப்பட நேர்ந்திருக்கும் யுத்தம் முடிந்து மூன்று வருடங்களாயின. இது உண்மை. ஆனால் இந்தச் சகாய நிதி எக்காரணங்கட்காகக் கொடுக்கப்பட்டதோ அக்காரணங்கள் இன்னும் நீங்கினபாடில்லை. அதற்குப் பதிலாக நிலைமை இன்னும் மோசம் என்றே கூற வேண்டும். இதனைச் சமாளிக்க ஒரு உபாயம் அதிக உணவுப் பொருட்களும், அரிசியும் இங்கேயே உற்பத்தியாக்குதலே. இதற்கு நல்ல சாதனங்கள், வசதிகளிருந்தாலும், நன்றாக ஆராயப்படவில்லை. கிரியாம்சையிற் போடவுமில்லை. இது மிகவும் வருந்தப்படத்தக்க விஷயம். உடனே வேண்டிய ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். பயனளிக்குமாயின் கருமத்திலீடுபட வேண்டும். மக்களின் செலவு அளவுகளைக் குறைத்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எல்லா முயற்சிகளையும் உடனே செய்ய வேண்டும்.

## 1946-ல் ஏற்பட்ட தீ விபத்து பாதிக்கப்பட்டடோர்க்கு வீட்டு வசதி

1946-ம் ஆண்டில் இவ்வூரில் ஏற்பட்ட அகோர தீ விபத்தில அநேக குடும்பங்கள் வீடிழந்து தவித்தனர். இவர்கட்குஉதவியளிக்கும் முகமாக அரசாங்கம் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கென ஒரு பணத்தொகை கொடுத்தது ஆனால் இன்னும் வீடுகள் கட்டுவது தாமதிக்கப்படுகிறது. அதனால் மக்கள் மேலும் கஷ்டத்தையே அநுபவிக்க நேரிட்டிருக்கிறது. இதைத் தாமதப்படுத்தியதினால், மற்றும் பாரிய, வீடமைப்புத் திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இப்புதிய திட்டம் இவ்வூருக்கு அத்தியாவசியம்வேண்டிய தேவையாகும். இவ்வீட்டுத் திட்டங்களுக்கு பொறுப்பாயுள்ளவர்கள், கூடிய சிரத்தையெடுத்து அவற்றைப் பூரணப்படுத்தி, மற்றும் புதிய நிருமாணத் திட்டங்களைத் தாமதப்படுத்தாது ஆரம்பிப்பார்கள் என்றெதிர் பார்க்கிறோம்.

## அரசாங்க வீடுகள், அவற்றின் வளர்ச்சி

துறைமுக வீதியோரமாய் அமைக்கப்பட்டுள்ள புதிய அரசாங்க வீடுகளில், உத்தியோகஸ்தர் குடியேறி நெடுநாட்களாய்விட்டன. குடியேறிய உத்தியோகஸ்தர் தமது வளவுப் பகுதியில் பலவித மரஞ்செடிகளை நாட்டி அவற்றைச் சிறப்புறச் செய்வதில் மிகுந்த சிரத்தை காட்டுகின்றனர். சிறிய மரக்கறித் தோட்டங்கள்கூட உண்டாக்கியிருக்கிறார்கள். இவ்வேளை கிருஷிகப்ப குகுதியார் இவர்கட்குத் தேவையான மா, தோடை, எலுமிச்சை முதலிய பழமரக் கன்றுகளைக் கொடுத்துதவுதல் மிகுநன்மையளிக்கும். இம்முயற்சி கேட்குமட்டும் காத்திராமல், உடனே திட்டமிடப்பட்டு அநுசரணைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

Printed at The Robert Press, 44, Green Lane, Colombo for Mr. V. S. M. Mani, Veechukara Street, Trincomalee.